REGD.No. M. 65...

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 27உ வியாழன் (13—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 28உ வெள்ளி (14—10—55) [இதழ் 103

மலேயா பல்கலைக் கழகம் விரைவில் தமிழ் கற்பிக்கும்

சிங்கப்பூர், அக். 12—

'மலேயா பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பதற்கு சீக்கிரமே வசதி செய்யப்படும்,' என்று முதன் மந்திரி டேவிட் மார்ஷல் அறிவித்திருக்கிருர்.

"இங்குள்ள இந்தியரில் பெரும்பாலானேரின் தாய்மொழி இந்தி அல்ல; எனவே, இந்தி மொழி கற்பிக்கும் பிரச்சினையே எழவில்லை" என்றும் மார்ஷல் தெரிவித்திருக்கிருர்.

இளமை உள்ளமும் முதுமை உள்ளமும்!

தோழர் நெடுஞ்செழியன் படப்பிடிப்பு

'அச்சத்தால் ஆற்றலிழக்கும் நிலை அகல வேண்டும்'

மாணவர்களுக்கு பொதுச்செயலாளர் அறிவுரை

"'இளைஞர் உள்ளம்' வேறு—'இளமை உள்ளம்' வேறு; 'இளமை உள்ளம்' என்பது, ஒவ்வொருவரது உள்ளத்தின் தன்மையேயாகும்;

"உள்ளம், பருவத்தைப் பொறுத்த ஒன்றுதான்; முதியோருக்கு 'முதுமை உள்ள'மும், இளைஞர்களுக்கு 'இளமை உள்ள'மும்தான் உண்டு; ஆனால்,அந்த உள்ளம் நல்ல முறையில் அடையப் பெற்றிருக்க வேண்டும்; அத்தகைய உள்ளங்களைப் பெற்று, நாட்டுக்கும், நமக்கும் நல்லன செய்ய முற்பட வேண்டும்;

"நாட்டிலே இன்று நாம் பார்க்கிருேம்—பல முதியோர்கள் 'இளம் உள்ளம்' படைத்திருப்பதை; அதேபோது, பல இளைஞர்கள் 'முதுமை உள்ள'த்தைப் பெற்றிருப்பதையும்கூடக் காண்கிருேம்;

"இளமை உள்ளம் எதையும் சாதிக்கும்; எதற்கும் அஞ்சாது; சோம்பலின்றிக் காரியமாற்றும்; ஒரு காரியத்தைச் 'செய்ய வேண்டும்' என்று நினைத்த உடனேயே, அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டது; அந்தக் காரியங்களைச் செய்ய எத்தனை இடுக்கண்கள் நேரிட்டாலும்கூட அவற்றையெல்லாம் துச்சமென மதித்து, செயலாற்றும் ஆற்றல் பெற்றது; ஆனல், இளமை உள்ளம் கொண்ட இளைஞர்களின் வயது ஏற ஏற—நாடி குறையக் குறைய—நிலை மாற மாற, அந்த இளமை உள்ளங்களின் வேகம் குறைகிறது—தணிகிறது; அதற்கேற்றாற்போன்ற 'முதுமை உள்ளம்' உருவாகிறது;

"'மாண்பு'—'மாட்சி' பெறுகின்றவன் மாணவன்; அத்தகைய 'மாட்சி'யினை அடையும் பயிற்சி பெறுகின்ற நிலையே மாணவரது நிலை; கலை, இலக்கியம் ஆகியவற்றின் கருத்துக்களைப் பயிற்சியின் பால் தமதாக்கிக்கொள்கின்ற நிலையே மாணவரது நிலையாகும்; அந்த நிலையைத் தம்முடைய நிலையாகக்கோள்ளும் அத்தகைய உள்ளம் பெற்றவர்களாக மாணவர்கள் திகழ வேண்டும்; அத்தகைய உள்ளத்தினை மாணவர்கள் பெறுவதற்கு, அவர்கள் நல்ல இளமை உள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்; அத்தகைய நல்ல உள்ளங்கோண்டு, நாட்டின் எதிர்காலச் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கான பயிற்சிக்கூடங்கள்தான் பள்ளிகளும், கல்லூரிகளும்;

"'இளமை உள்ளம்', எதையும் சாதிக்கும் ஆற்றல்—வன்மை கொண்டது; 'முதுமை உள்ள'த்தால் அந்த ஆற்றலைப் பெற முடியாது. 'எதையும் சாதிக்கும்' ஆற்றல் கொண்ட அத்தகைய 'இளமை உள்ளங்'கள்தான் நமது நாட்டிற்கு மிகமிகத் தேவையானவை! ஏனெனில், அத்தகைய உள்ளங்கொண்ட இளைஞர்கள், வருங்காலக் குடிமக்களாகும்போதுதான், நமக்கு—நமது நாட்டிற்குத் தேவையான எதையும் சாதித்துக்கொள்ளும் ஆற்றல்—நிலை பெற முடியும்;

"நாட்டிற்குத் தேவையானவற்றை—செய்ய வேண்டியனவற்றைச் செய்ய, உயர்வு—தாழ்வு பேதம் இல்லாத ஒரு சமுதாயத்தைக் காண இளைஞர்கள்—குறிப்பாக மாணவர்கள்தான் முன்வர வேண்டும்; ஏனெனில், மாணவர்களைத்தான் அத்தகைய பெரும் பொறுப்புச் சார்ந்தது; அத்தகைய பெரும் பொறுப்பு, இளைஞர் பருவத்திலேதான்—இளமை உள்ளம் கொண்டிருந்தால்தான் கிடைக்கும்; எனவே மாணவர்கள், தமிழ் மணங்கமழும் உள்ளம் பெற்று, அறிவுடன் ஆற்றலும் கொண்டு, நல்லனவற்றைச் செய்ய வேண்டும்; நாட்டை நாடாகவும், மக்களை மக்களாகவும், வாழ்க்கையை வாழ்க்கையாகவும் ஆக்க வேண்டிய பொறுப்பினை, தாங்கள் நன்குணர்ந்து அதன்வழி நின்று செயல்பட வேண்டும்; அவ்வாறு செயல்பட மாணவர்களது உள்ளம் 'இளமை உள்ளம்' கொண்டிருக்க வேண்டும்; எனவேதான், மாணவர்கள் இளமை உள்ளத்தைப் பெற்றுத்தான் ஆக வேண்டும் என்கிருேம்;

"ஆனல், இன்றைய நமது நாட்டிலுள்ள மாணவர்களோ, அத்தகைய உள்ளம்—'இளமை உள்ளம்' பெற்றில்லாதவர்களாக இருக்கின்றனர்; நமது மாணவர்களும், இளைஞர்களும், எதைக் கண்டாலும் அஞ்சி அஞ்சிச் சாகும் நிலையில்—தங்களது 'பிஞ்சு உள்ள'த்திலும்கூட கோழைத்தனம் கொண்டவர்களாக இருக்கின்ற நிலைமையைத்தான் நாம் இன்று காண்கிருேம்; 'எதையும் சாதிக்கும் ஆற்றல்' கொண்ட இளமை உள்ளம், இன்றைய நாட்களில் மாறிவிட்டது; எதையும் கண்டு அஞ்சாத இளமை உள்ளம், இன்று எதற்கெடுத்தாலும் அச்சத்தால் செயலிழந்து கிடக்கின்ற நிலை பரவிக்கிடக்கிறது; எனவே, மேலும் மேலும் இத்தகைய நிலை நீடிக்கவிடாமல், 'இளம் உள்ளம்' மேலும் மேலும் வளர, அதனைக் காப்பாற்றியே தீர வேண்டும்; 'இளமை உள்ளம்' மாணவர்—இளைஞர் பருவத்திலே மட்டும்தான் கிடைக்கக்கூடிய ஒன்று; அது, காலம் மாறிவிட்டால்—காலம் செல்லச்செல்ல—முதுமை நெருங்க நெருங்க மீண்டும் அதனைப் பெற இயலாத நிலை உருவாகிவிடும்; எனவேதான், 'இளம் உள்ளம்' பெற்றிருக்க வேண்டிய நிலை மாறிவிடாமல், இளம் உள்ளங்களைக் காப்பாற்ற வேண்டியது மிக மிக அவசியமாகிறது."

—இவ்வாறு, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 12—10—55-ல், சென்னை, புரசைவாக்கம் எம் சிடி. எம். உயர்நிலைப்பள்ளி மாணவர் தமிழ்க் கலை மன்றச் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் 'இளமை உள்ளம்' எனும் தலைப்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விடுதலை வீரர்களின் அடிச்சுவட்டில்...!

மேலும் பொதுச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—"எந்த ஒரு பிற நாட்டின் விடுதலை வீரர்களின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்த்தாலும், அவர்களெல்லாரும் அச்சத்தைத் துறந்துவிட்டவர்களாகவேதான் காணப்படுகின்றனர்; ஏனெனில் அவர்களது இளமைப் பருவத்திலிருந்தே, எதற்கும் அஞ்சாத—எதையும் சாதிக்கும் ஆற்றல் கொண்ட அவர்களது 'இளமை உள்ளம்' காப்பாற்றப்பட்டது; ஆனல், நமது நாட்டிலே எடுத்துக்கொண்டால், நமது இளைஞர்கள், அவர்களது இளமைப் பருவத்திலேயே கெடுக்கப்பட்டு விடுகின்றனர்; அதன் காரணமாகத்தான் நாமும் இன்றைய உலக சூழ்நிலையில் இப்படி இருக்கிருேம்—எதையுமே சாதிக்க இயலாதவர்களாக—

(4-ம் பக்கம் பார்க்க)

10 நிமிட நேர வேலை நிறுத்தம்

80,000 தொழிலாளர்கள் ஈடுபட்டனராம்!

சிங்கப்பூர், அக். 12—

மரண தண்டனைக்குப் பதில் ஆயுள்கால தண்டனையும், கைக் குண்டுகளை வீசுதல் அல்லது வைத்திருத்தலுக்கு கசையடி தண்டனை அளிப்பதுபோன்ற திருத்தங்களை பொது பாதுகாப்பு மசோதாவிற்குக் கொண்டுவருவது குறித்து, சிங்கப்பூர் சட்ட சபையில் விவாதிக்கப்பட்டு வருகிறது; அத்திருத்தங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகளுக்கு ஆதரவு தந்து, 80,000 தொழிலாளர்கள், 10 நிமிட நேரம் வேலை நிறுத்தம் செய்தனராம்.

மாநில சர்க்கார்களுக்கு பண்டித பந்த் எச்சரிக்கை

புதுடில்லி, அக். 12—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை ஒட்டி எழுந்துள்ள நிலைகளினல், சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவைகள் பாதிக்கப்படாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென எல்லா மாநில சர்க்கார்களுக்கும் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், எச்சரிக்கைக் குறிப்பு அனுப்பியிருக்கிருர் என்று தெரிய வருகிறது.

பஞ்சாப், பெல்லாரி தாலுகா, மராட்டியம் முழுவதும், பெல்காம், பீகார், மேற்கு வங்க எல்லை—ஆகியவை எல்லாம் 'அபாய முனை'களாகக் கருதப்படுகின்றனவாம்.

பிரெஞ்சு மந்திரி சபை மீது

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

பாரிஸ், அக். 12—

பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில், சோஷலிஸ்டு கட்சியினர், மந்திரி சபையினர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரபணை ஒன்றைக் கொண்டு வந்துள்ளனராம்.

ஆலைத் தொழிலாளர் கோரிக்கை

சர்க்கார் அலுவலகத்திற்கு ஊர்வலம்

சென்னை, அக். 12—

இன்று மாலை, பெரம்பூர் 'பக்கிங்காம் கர்நாடிக்' ஆலையைச் சேர்ந்த சுமார் 100 தொழிலாளர்கள், சைக்கிள் ஊர்வலமாக சர்க்கார் அலுவலகத்திற்கு முன்கூடி குரல் எழுப்பினர்; அவர்களின் சார்பாக தோழர் லஜபதி, தொழிலாளர் இலாகா மந்திரி பக்தவத்சலத்தைப் பேட்டி கண்டார். சம்பள உயர்வு, 'ரொஜுடி' போன்ற தங்களின் கோரிக்கைகள் இன்னும் ஏற்றுக் கொள்ளப்படாததால், அக்டோபர் 6-க் தேதியன்று, ஆலை நிர்வாகிகளுக்கு வேலை நிறுத்த எச்சரிக்கை தரப்பட்டிருப்பதாகவும், சர்க்கார் இது விஷயத்தில் தலையிட வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிருர்.

இதுபோன்ற விஷயங்களைக் கவனிப்பதற்கென சர்க்கார் அதிகாரிகளை நியமித்திருப்பதால், தொழிலாளர்கள் முதலில் தொழில் கமிஷனருடன் தொடர்புகொள்ள வேண்டும் என்றும், சிக்கல் குறித்து அவர் விசாரிப்பார் என்றும் மந்திரி பதில் தந்தாராம்.

பெல்லாரியில் இரயில்கள் நின்றன

பஸ்கள் நிறுத்தப்பட்டன; மாணவர்கள் கிளர்ச்சி

பெல்லாரி, அக். 12—

பெல்லாரி இரயில் நிலையத்திற்கு வந்துகொண்டிருந்த பெங்களூர்—ஹுப்ளி பிரயாணிகள் இரயிலை சுமார் 200 மாணவர்கள் தடுத்து நிறுத்தினர்; இரயில்வே நிலையத்தில் சுமார் 25 நிமிட நேரம் மறியல் நடத்தினர்; பின்னர், நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்று 'மாநிலக் குழு அறிக்கை ஒழிக' என்றெல்லாம் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

'பெல்லாரி நாள்' கொண்டாடிய கன்னடியர் பலரும் மூன்று இரயில்களை நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

நகரசபை உயர்நிலைப் பள்ளி ஒன்றில், கன்னட—தெலுங்கு மாணவரிடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது இதனல் சுமார் 12 மாணவர்கள் காயமடைந்திருக்கின்றனர்.

ஒரு 'மெயில்' பஸ் உட்பட, ஹோஸ்பெட்—பெல்லாரி இடையில் ஓடிக்கொண்டிருந்த நான்கு வண்டிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்திவைத்திருக்கின்றனர்

ஏராளமான போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது.

கராச்சி பொருட்காட்சி

இந்திய நிலையத்தின் முன் மறியல் நீடிக்கிறது

கராச்சி, அக் 12—

இங்கு நடைபெறும் கைத்தொழில் பொருட்காட்சியில் உள்ள இந்திய நிலையத்தின்முன் இன்னும் தொடர்ந்து மறியல் நடைபெற்று வருகிறது.

மறியலில் ஈடுபட்ட ஒரு அகதியையும், ஒரு மாணவரையும் போலீசார் கைது செய்திருக்கின்றனர். இதற்குமுன், அவர்களும், கூடயிருந்த வேறு சிலரும் கல்லெறிதல் போன்ற பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டதாக இந்திய தேசிய ஏடுகள் செய்தி அறிவிக்கின்றன.

உடனே போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனராம்; இந்திய நிலையத்திற்கு தகுந்த போலீஸ் பாதுகாப்புத் தரப்பட்டிருக்கிறதாம்.

மாலை 5 மணி முதல் இரவு வரை மறியல் நடைபெற்றிருக்கிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை — 13—10—'55 — வியாழன்

நெருக்கடி தணிகிறதா?

உலக மக்களின் அமைதியான வாழ்க்கையை அச்சுறுத்தும் பெரும் கோர யுத்தங்களை மூட்டிவிடுமோ என்ற ஐயப்பாட்டை இடைவிடாது நீடிக்கச் செய்துவரும் நெருக்கடி நிலைகள், அண்மையில் ஜினீவாவில் நடைபெற்ற நால்வர் மாநாட்டிற்குப் பிறகு வெகுவாகத் தணிந்திருக்கின்றன; புதிய நம்பிக்கை அரும்பியிருக்கிறது. 'அந்த நம்பிக்கை அரும்பு, மலர்ந்து, மணம் பரப்பும்' என்றெல்லாம் பரவலாகக் கூறப்பட்டது; ஆனால், நடைமுறைகளை உன்னிப்பாகக் கவனித்து வருவோருக்கு, 'நெருக்கடி நிலைகள் உண்மையிலேயே தணிந்து வருகின்றது என்பதில் பலமான சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது' என்றால், அது மிகையாகாது; ஏனெனில், நெருக்கடி நிலை தணிகிறது என்பதற்காகச் சுட்டிக் காட்டப்படும் நடவடிக்கைகளின் அளவுக்கு, நெருக்கடி நிலை தணியவில்லை என்று கூறுவதற்கு ஆதாரமாகும் சம்பவங்களின் எண்ணிக்கையும் இருக்கத்தான் செய்கின்றன.

ஜினீவாவில் கூடிய நால்வர் மாநாட்டின் பெரும் வெற்றியென்று கூறப்பட்டதெல்லாம் வல்லரசுகள் நான்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்வதற்குத் தேவையான நல்லெண்ணத்தையும், பரஸ்பரம் நம்பிக்கையையும் அவர்கள் வெளிக்காட்டினர் என்பதுதான்.

ஆனால், மாநாட்டில் கூடிக் கலைந்த பிறகு, அங்கு வெளிக்காட்டப்பட்டதாகச் சொல்லப்பட்ட பிறரை நம்பும் நல்லெண்ணம், நீடித்து வல்லரசுகளிடை இடம் பெற்றிருப்பதாகக் கூறுவதற்கு இல்லாமலிருக்கிறது.

அண்மையில், அமெரிக்க வெளி விவகார இலாகா மந்திரி, ஆயுதக் குறைப்பு பற்றிக் கருத்தறிவித்திருப்பது, 'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது' என்ற கதையைத்தான் நினைவூட்டுகிறது.

ரஷ்யா, ஜினீவா மாநாட்டிற்குப் பிறகு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு உள்நோக்கம் கற்பித்து, சந்தேகக் கண்ணுடன் ரஷ்யாவை நோக்கவேண்டியிருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

இப்படி அவர் ரஷ்யாவின் நல்லெண்ணத்தை அமெரிக்கா சந்தேகிப்பதாகத் தெரிவிப்பதே, அமெரிக்காவின் நல்லெண்ணத்தைப் பிறர் சந்தேகிப்பதற்கும் போதுமான சான்றாக அமையக்கூடும்.

அமெரிக்காதான் இப்படி என்றால், இதர வல்லரசுகளும் அப்படியேதான் நடந்துகொள்வதாகக் கூறப்படுவதில் நியாயமே இல்லை என்று கூறிவிட முடியாது.

பொதுவாகவே உலக மக்களின் சுபீட்சத்திற்காகவும், அமைதியான வாழ்வுக்குப் பாதுகாப்புத் தேடுவதற்காகவும்தான் அமைந்துள்ளது என்று வர்ணிக்கப்படும் ஐ. நா. சபையினின்றும், நான்கு வல்லரசுகளுள் ஒன்றான பிரான்ஸ், தனது ஆதிக்கத்திற்குட்பட்ட அல்ஜீரியாவின் சுதந்திரத்தை ஒட்டி எழுந்த சிக்கலை, சபை விவாதிக்க வேண்டும் என்று கருத்தறிவித்ததே தவறு எனக் கூறி வெளியேறியதின் மூலம் ஒரு நெருக்கடியையே உருவாக்க முனைந்தது. அல்ஜீரியாவில் தனது ஆதிக்கம் நீடிக்கவேண்டும் என்ற தனது சுயநல நோக்கத்திற்காக, உலகெங்கணுமுள்ள மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கென அமைந்துள்ள ஒன்று என பிரெஞ்சுக்காரர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு உலக நிறுவனமான ஐ. நா. சபையே இயங்க முடியாயாமற் போகவேண்டும் என்று நினைக்கிறது, பிரான்ஸ்; இந்த வல்லரசு, எப்படி உலக மக்களின் அமைதியான வாழ்வில் நல்லெண்ணத்துடன் கூடிய அக்கரை கொண்டது என்று கூறிவிட முடியும்?

எகிப்து நாடு, செக்கோஸ்லோவேக்கியா, சோவியத் ரஷ்யா ஆகியநாடுகளிடமிருந்து ஆயுத உதவி பெறுவது, பிரிட்டனுக்கும் — அமெரிக்காவுக்கும் பிடிக்கவில்லை. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள், எகிப்தின் மனக்கசப்பிற்கு ஆளாகியுள்ள இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்குகின்றன—இஸ்ரேலின் ஆயுத பலம் எகிப்தின் ஆயுத பலத்தைவிட அதிகமாயிருக்க வேண்டும் என்ற நியாயமே இல்லாத எண்ணத்தினால்!

'அமெரிக்கா, பிரிட்டன் ஆயுத உதவியால் பலம் பெற்றுவரும் இஸ்ரேல், எங்கே தன்னைத் தாக்குமோ,' என்று அஞ்சுகிறது எகிப்து; உடனே ரஷ்யாவிடம் ஓடி உதவி கோருகிறது; ரஷ்யாவும், ஆயுதங்களை வாரி வழங்கச் சம்மதித்திருக்கிறது.

'உலக நெருக்கடி தணிய வல்லரசுகளும், இதர நாடுகளும் தங்கள் ஆயுத பலத்தை—படை பலத்தை வெகுவாகக் குறைத்துக் கொள்ளவேண்டும்; சுருங்கக் கூறின், உள்நாட்டு அமைதியையும், சட்டத்தையும் நிலைநாட்டமட்டும் போதுமான ஆயுத பலமே ஒவ்வொரு நாடும் கொண்டிருக்க வேண்டும்; அதுவே சமாதானத்திற்கு வழி அமைக்க உதவ முடியும்,' என்று பேசப்படுகிறது—ஆயுதக் குறைப்பு வேண்டுமென தெளிவாகக் கோரப்படுகிறது; ஆனால், வல்லரசுகளோ, இரு வேறு நாடுகளிடை உள்ள சிறு பூசலைப் பெரிதாக்கி, அந்த நாடுகளிடை விபரீத விளைவுகளை உள்ளடக்கிய ஆயுதப் போட்டியை வளர்க்க முற்படுகின்றன.

இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, 'நெருக்கடி தணிகிறது' என்று கூறப்படுவதை, நிறைந்த மனதுடன் நம்ப முடியவில்லையே!

ரூ. 80 கோடியில்!

சென்னைக்கு ரூ. 17 கோடி மட்டுமே கிடைக்குமாம்!

புதுடில்லி, அக். 10—

சிறிய கிராமத் தொழில் வளர்ச்சிக்காக கார்வே குழு செய்துள்ள சிபாரிசுகளின்படி கைத்தறி தொழிலுக்கு உதவித் தொகை தரப்பட விருப்பதாயும், சென்னை, பம்பாய் மாநிலங்களுக்கு அதிகமான தொகை கிடைக்கும் என்றும் தெரியவருகிறது.

சென்னை மாநிலத்தில், இரண்டாம் திட்ட காலத்தில் கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக சுமார் ரூ. 17,44,00,000 ஒதுக்குமாறு திட்டக் குழுவிற்கு தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கார்வே குழு தெரிவித்திருக்கிறது பம்பாய்க்கு ரூ. 13,64,00,000 ஒதுக்குமாறு கோரியிருக்கிறது.

கைத்தறித் தொழிலுக்காக, மத்திய சர்க்கார் மொத்தமாக ஒதுக்க வேண்டும் எனக் கோரியுள்ள தொகை ரூ. 80 கோடியாகும்.

சொன்னால் போதுமா?

சென்னை, அக். 11—

"மக்களின் நல்வாழ்வுக்கு மருத்துவ மனைகள் முக்கியமானவையல்ல; சுகாதார சூழ்நிலையும், சத்துள்ள உணவும்தான் முக்கியமானதாகும்; நோய்கள் வராமல் தடுப்பதே குறிக்கோளாகும்; இதைப் பொதுமக்களும், டாக்டர்களும் உணரவேண்டும்," என்று சுகாதார அதிகாரிகள் மாநாட்டில், அமைச்சர் ஏ. பி. ஷெட்டி வற்புறுத்தியுள்ளார்.

தாராள நோக்கம்!

"இன்னும் இரண்டு ஆண்டுகளில் சென்னை மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடமும், ஒரு கிணறும் ஏற்படுத்த வேண்டுமென்பதே சர்க்காரின் நோக்கமாகும்," என்று, அமைச்சர் பரமேசுவரன், வேலூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார்.

50 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்குமாம்!

அகமதாபாத், அக். 12—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 'அம்பர் சர்க்கா' உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டால், 50 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்குமாம்!

சுமார் ரூ. 20 கோடி செலவில், 25 இலட்சம் 'அம்பர் சர்க்கா'க்களை உபயோகத்திற்குக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுகிறதாம்.

சீனாவின் சுயமுயற்சி!

நவசீனாவில், ஹோப்பே மாகாணத்தில், சிகியாச் வாங் என்ற இடத்தில், 95,000 கதிர்களுடனும், 2 400 தறிகளுடனும்கூடிய ஒரு புதிய பருத்தி ஆலை, உற்பத்தியைத் துவங்கியுள்ளதாம். ஆலை இயந்திரச் சாமான்கள் முழுவதும் சீனாவிலேயே செய்யப்பட்டதாம்!

அரபு நாடுகளுக்கு உதவ ரஷ்யா முன்வருகிறது

அரசியல், பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் அரபு நாடுகளைப் பலப்படுத்துவது ரஷ்யாவின் கொள்கை என்றும், அந்நாடுகளுக்குத் தேவையான சகல உதவிகளையும் அளிப்பதற்கு ரஷ்யா தயாராக இருப்பதாகவும் கெய்ரோவிலுள்ள ரஷ்யத் தூதுவர் கூறியுள்ளாராம்.

அரபு நாடுகள் போக்கு

முன்னர், கோவாவுக்கு பெட்ரோல் வினியோகம் செய்துவந்த நாடுகள் தற்போது, அவ்வாறு வினியோகிப்பதற்கு மறுத்துவிட்டன; ஆனால், குறைந்த விலையில், கோவாவுக்கு பெட்ரோல் வினியோகிப்பதற்கு அரபு நாடுகள் முன்வந்துள்ளனவாம்.

சிபாரிசு செய்ய மாநிலக் குழு மேற்கொண்ட நடவடிக்கைகள்

புதுடில்லி, அக். 11—

மாநில சீரமைப்புக் குழுவினர், தங்கள் சிபாரிசுகளை மேற்கொள்ளுவதற்கு முன்பு, 1 52,280 தஸ்தாவேஜுகளைப் பரிசீலித்திருக்கின்றனர்; 9,000 பேர்களைப் பேட்டி கண்டனர்; 38,000 மைல் பிரயாணம் செய்தனர்.

குழுவிடம் தாக்கல் செய்யப்பட்ட பல தஸ்தாவேஜுகள் தந்திகளாகவும், அச்சடித்த தீர்மானங்களாகவும் இருந்தன; அவை எல்லாம் குறிப்பிட்ட வட்டார மக்களின் எண்ணங்களைத் தெரிவிப்பனவாயிருந்தன.

தீவிரமான பரிசீலனைக்கு உட்பட்ட அறிக்கைகள் 2,000-த்திற்கு மேலிருக்கவில்லை.

பேட்டிகள் எல்லாம், தனிப்பட்ட முறையில், மறைவான இடத்தில் தரப்பட்டன; பேட்டிக்கு வருவோர், தங்கள் கருத்தினைத் தெளிவாகத் தெரிவிக்க அதுவே வசதியாயிருக்கும் என்ற வகையில் அப்படிச் செய்யப்பட்டிருந்தது.

பொதுமக்களின் பிரதிநிதிகளாயிருப்போர் அனைவருடையவும் கருத்தை அறிந்து கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டது.

சென்னை நகரில் உள்ள மலையாளிகள் எதிர்காலம்!

மலபார் மாவட்டம் கேரள மாநில அமைப்புக்காக திரு-கொச்சியுடன் இணையவேண்டுமென மாநிலக் குழு சிபாரிசு செய்திருப்பதை ஒட்டி, சென்னை நகரில் உள்ள மலையாளிகளின் எதிர்காலம் என்ன என்று அவர்கள் சிந்திக்க முற்பட்டிருக்கின்றனராம்.

தங்களின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை அவர்களால் இப்போது திட்டமாகத் தெரிந்து கொள்ள இயலாது என்று கருதப்படுகிறது; இதேபோல, சர்க்காரில் உத்தியோகம்புரியும் மலையாளிகளும் கவலைப்படத் தொடங்கியிருக்கின்றனர்.

'கெஜட்' பதிவில்லாத சென்னை சர்க்கார் ஊழியர்களில்மூன்றில் ஒரு பகுதியினர் மலையாளிகள் என்றும், இவர்கள் அத்தனை பேருமே, ஆந்திரப் பிரிவினையின்போது தெலுங்கர்கள் அனுப்பப்பட்டதைப்போல திரு-கொச்சிக்கு அனுப்பப்பட முடியாதென்றும், இவர்களில் பெரும்பாலானோர் சென்னை சர்க்காரிலேயே வேலைசெய்யவேண்டிவரும்என்றும் கூறப்படுகிறது. சர்க்கார் உத்தியோகங்களில் தமிழர்களுக்கே அதிகமான இடங்கள் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு இணங்கவேண்டிவரும்போது தங்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும் வாய்ப்புகள் அதிகமிருக்காது என்று அவர்கள் ஐயப்படுவதாகத் தெரிகிறது.

மலபார் மாவட்டம், கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் திப்பு சுல்தானால் ஒப்படைக்கப்பட்ட காலத்தில் இருந்து, சென்னையுடன் தொடர்புகொண்டு விளங்கி வருவதால், அதனைவிட்டு இப்போது விலகி, கேரளத்துடன் ஐக்கியமாவது வருந்தத்தக்க ஒன்று என்று சில கேரளர்கள் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

மலம்புழா அணைக்கட்டு

ரூ. 5,25,00,000 செலவில் உருவாகியது

மலபார் மாவட்ட மக்கள் கோரிக்கை நிறைவேறியது

பாலக்காடு, அக் 12—

கடந்த 9-ந் தேதியன்று, 40 ஆண்டுகளாக மலபார் மாவட்ட மக்கள் கோரிவந்த மலம்புழா அணைக்கட்டுத் திட்டம் பூர்த்தியாகிவிட்டது.

மலபார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது நீர்ப்பாசனத் திட்டம் இதுவேயாகும்; ரூ 5 25,00 000 செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அணைக்கட்டு முடிவாகிவிட்டதைக் குறிக்கும் 'நினைவுக் கல்' ஒன்றை சென்னை முதலமைச்சர் காமராசர் திறந்துவைத்தார்.

'பாரத புழா' நதியின் கிளை நதியான மலம்புழா நதியின் குறுக்கே—அதாவது ஒலவக்கோட்டிலிருந்து சுமார் 5 மைல் தூரத்தில்—ஒரு அணை கட்டப்பட்டுள்ளது; இதன் நீளம் 6,066 அடி; இதில் 5 பிரிவுகள் உள்ளன.

அணையும், இடதுபுறக் கால்வாயும் முடிவடைந்த பின்பு, 40 000 ஏக்கர்களில் 'இருபோகம்' நெல் விளையக் கூடும்; பாலக்காட்டில் சுமார் 30,000 ஏக்கரில் 'மூன்று போகம்' கூட பயிர்கள் விளையக் கூடுமாம்.

"எழில் நிறைந்த சூழ்நிலையும், இயற்கைக் காட்சிகளும் ஒருங்கே அமைந்துள்ள மலம்புழா அணைக்கட்டு, மைசூர் பிருந்தாவனத்தையே நினைவூட்டுவதாக இருக்கிறது; இது ஒரு உல்லாச யாத்திரை இடமாக இருக்கும் என்பதில் சந்தேகமேதும் இல்லை," என்று, நினைவுக் கல்லைத் திறந்துவைக்கும் போது காமராசர் குறிப்பிட்டார்.

முழுநேர ஊழியர்கள்?

மக்கள் சபை, மாநில சட்டசபை துணை சபாநாயகர்களும், துணை சேர்மன்களும் முழு நேர ஊழியர்களாகக் கருதப்பட்டு, இனி அவர்கள் வேறு 'அலுவல்'கள் ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்களெனத் தெரியவருகிறதாம். இவர்களுக்கு துணை அமைச்சர்களின் ஊதியமும், அந்தஸ்தும் வழங்கப்படுமெனக் கருதப்படுகிறதாம்.

ரூ. 10 கோடி கடன்

பர்மாவுக்கு இந்தியா வழங்கும்

புதுடில்லி, அக். 10—

தேவைகளை ஒட்டி சில தவணைகளில் இந்திய சர்க்கார் பர்மா சர்க்காருக்கு ரூ. 10 கோடி கடன் தருவது என்று முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இதுபற்றி நடந்த பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதாகவும், பர்மியத் தூதுவர் இரங்கூன் சர்க்காருக்கு இதுகுறித்தத் தகவல் அனுப்பிவிட்டதாகவும் தெரியவருகிறது.

அனுரின் பெவான் தோல்வியுற்றார்!

மார்கேட், அக். 11—

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் பொருளாளர் பதவிக்கு முன்னாள் நிதிமந்திரி க்யூகெய்ட்ஸ்கெல் என்பாருடன் போட்டியிட்ட அனுரின் பெவான் தோல்வியுற்றிருக்கிறார்.

இருவருக்குமிடையில், இலட்சக் கணக்கில் வாக்கு வித்தியாசம் இருந்ததாம்.

தொழிற் சங்க வாக்குகள் கெய்ட்ஸ்கெல் பக்கம் திரும்பியதால் பெவானுக்கு சென்ற ஆண்டைவிட ஏழரை இலட்சம் வாக்கு குறைந்ததாம்!

திருப்பத்தூரில் பொதுச் செயலாளர்

நகராண்மைக் கழக வரவேற்பும், பொதுக்கூட்டத்தில் மாநில மாநாட்டு நிதியளிப்பும்

9—10—55 மாலை 5 மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களது திருப்பத்தூர் வருகையை முன்னிட்டு, அவரை வரவேற்க நகரசபைத் தலைவரும், நகராண்மைக் கழக உறுப்பினர்களும், இராகவன் எம்.எல்.ஏ., அவர்களும், மற்றும் இயக்கத் தோழர்களும், உள்ளூர் பிரமுகர்களும், ஏராளமான பொது மக்களும் கூடியிருந்தனர். 5-30 மணிக்கு, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை சத்தி, தோழர் போளூர்-சுப்ரமணியம் அவர்களும் வந்து சேர்ந்ததும், நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் வி பி. இராஜாபாதர் பொதுச் செயலாளருக்கு மாலையிட்டு வரவேற்றார்.

நகரசபையில் வரவேற்பு

பின்னர், நகரசபைத் தலைவர் வி. எஸ். வீரபத்திரன் அவர்கள் தலைமையில், நகராண்மைக் கழக உறுப்பினர்கள் சார்பாகத் தோழர் குப்புசாமி அவர்கள் பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

பின்னர், பொதுச்செயலாளர் அவர்கள், வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான், அரியதோர் உரை நிகழ்த்தினர்.

பொதுக்கூட்டம்

மாலை 6½ மணிக்கு, சந்தைவெளியில், தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. டாக்டர் எம். கிருஷ்ணன் தலைமை தாங்கினர். தோழர் போளூர்-கே. சுப்பிரமணியம் சிறிது நேரம் சொற்பொழிவாற்றியபின், பொதுச்செயலாளருக்கு நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. ஆர். தனராமன் வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

மாநில மாநாட்டு நிதிக்கு

பின்னர், கிளைக் கழகச் செயலாளர் தோழர் சி எம்.எஸ். பாலு அவர்களால், மாநில மாநாட்டு நிதிக்கென ரூ. 201 பொதுச்செயலாளரிடம் அளிக்கப்பட்டது. மற்றும், அழகிரி முன்னணி நாடக மன்றச் செயலாளர் அருணகிரி அவர்களால் 201 அணா பண முடிப்பும், வாழ்த்திதழும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. சி.எம்.எஸ். நினைவு மன்றத்தால் 101 அணா பண முடிப்பும் கொடுக்கப்பட்டது.

தி. மு கழகத் தோழர்கள் பலர் பொதுச்செயலாளருக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும், சரிகை மாலைகளும் அணிவித்தனர்.

பின்னர், பொதுச் செயலாளர் அவர்கள் நிதியளிப்புக்கும், வரவேற்புக்கும் பதிலளிக்குமுகத்தான், திருச்சி மாநில மாநாடு பற்றியும், சென்ற ஆறுவருட காலத்தில் கழகம் அடைந்துள்ள வளர்ச்சியையும், தற்கால அரசியல் நிலையையும், 'திராவிடம் பிரிந்தால் வாழாதா?' என்பது குறித்தும், இந்தி தமிழ் நாட்டுக்குத் தேவை இல்லை என்பதின் அவசியத்தையும் விளக்கி நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

மைசூர் சட்ட சபையில் அவசரத் தீர்மானம்

மைசூர், அக் 11—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் வெளியான பிறகு, அதை ஒட்டி எழுந்துள்ள நிலைகளைக் குறித்து விவாதிப்பதற்காக சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று, முல்கா கோவிந்த ரெட்டி என்ற சோஷலிஸ்டு உறுப்பினர் கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணை சபைத் தலைவரால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

"குழுவின் சிபாரிசுகளால் மைசூரின் எல்லைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன; ஆங்காங்கே மக்கள் பெருங் கவலை கொண்டிருக்கின்றனர்," என்று அவர் கூறினார்.

சட்ட மந்திரியான ஏ ஜி. இராமச்சந்திர ராவ் பிரேரணையை எதிர்த்துப் பேசுகையில், 'குழுவினர், சிபாரிசுகள் மட்டுமே தெரிவித்திருக்கின்றனர்; அவை மக்களின் பரிசீலனைக்காக வெளியிடப்பட்டிருக்கின்றன; இறுதி முடிவுகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை; எனவே, இது ஒன்றும் அவசரமாக விவாதிப்பதற்குரிய பிரச்சினை இல்லை' என்று தெரிவித்திருக்கிறார். அதன்பேரில் தலைவர் தீர்மானத்தை நிராகரித்தார்.

சென்னையின் பாசன, மின்சாரத் திட்டங்கள்

சென்னை, அக். 11—

மேற்குத் தொடர்ச்சி மலையில் எவருக்கும் பயன் படாது வீணாகிக் கொண்டிருக்கும் நீரை, பாசனத்திற்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்த முடியுமாவென்பதைப் பரிசீலித்து வேலை துவங்குவதற்கு திட்டக் குழு, சென்னை சர்க்காருக்கு ரூ 2 கோடி மானியம் வழங்கியிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றுவதற்காக சென்னை சர்க்கார் மூன்று திட்டங்களைத் தாக்கல் செய்திருக்கின்றது:—

(1) கோவை மாவட்ட பொள்ளாச்சி பிரதேச மக்களின் நன்மைக்காக பரம்பைக்குளம் திட்டம்;

(2) மதுரை — இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஆலடி திட்டம் (மேலை பெரியாறு);

(3) திருநெல்வேலி— இராமநாதபுரம் மாவட்டத்திற்காக பம்மையாறு திட்டம்;

இந்த மூன்று திட்டங்களிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்.

பரம்பைக்குளம் திட்டத்தினால், சென்னை, திரு-கொச்சி ஆகிய இரு மாநிலங்களுக்கும் பயன் கிடைக்கும்; இந்தத் திட்டத்தினால் சித்தூர்—கொச்சியில் 2 இலட்சம் ஏக்ராவுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

பரம்பைக்குளம் திட்டத்திற்கு திரு-கொச்சி சர்க்கார் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள்; இதர இரண்டு திட்டங்களுக்கும் திரு-கொச்சி சர்க்கார் அனுமதி தரவில்லை; இதுகுறித்து உதவி கோரி மத்திய சர்க்காரிடம் சென்னை சர்க்கார் முறையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கழகச் செய்திகள்

பம்பாய்—அந்தேரி தி.மு. கழகம்

30—9—55 மாலை 6 மணியளவில் கோல்டுங்கரி கழகப் பணிமனையில், தோழர் என். ரத்தினமுத்து தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர் எல். எம். பாண்டியன் கடந்த கால அறிக்கை, கடிதங்கள் அனைத்தையும் வாசித்தார். பின்னர், தோழர் இரா. தஞ்சைத்துரை பொருளாளர் பொறுப்பிலிருந்து விலகுதலை ஏற்றுக்கொண்டும், புதிய பொருளாளராகத் தோழர் வி. சுப்பையாவைத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டதுடன், பொதுக் குழு உறுப்பினராகத் தோழர் எஸ். முத்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கீரமங்கலத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

1—10—55 மாலை 3 மணிக்கு கீரமங்கலம் தி. மு. க. கிளைச் சார்பில், நாட்டுப் பிரிவினை நாள் விழாவையொட்டி, தி மு. கழகத் தலைமைக் கொடிமரத்தில் கொடியேற்றி, பின் ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று, தி. மு கழக உறுப்பினர்கள் இல்லங்கள்தோறும், கழகச் செயலாளர் அவர்களால் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. கொடி ஏற்றுவிக்கப்பட்ட இடங்களில் எல்லாம், ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. ஊர்வலத்தில், பனங்குளம், கொத்தமங்கலம், நகரம் சேந்தன்குடி தி. மு கழகக் கிளைத் தோழர்களும், ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

சென்னை 4-வது வட்ட தி. மு. கழகம்

5—10—55 மாலை 8 மணிக்கு, எண் 112 சோலையப்பன் தெரு, கல்வாய் இல்லத்தில், தோழர் சேதுராசன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில், வரவு-செலவு கணக்கு அங்கீகரிக்கப்பட்டதுடன், சென்னை நகரசபைத் தேர்தலில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 9-வது வட்டச் செயலாளர் தோழர் வி. முனுசாமி, 29-வது வட்டச் செயலாளர் தோழர் அ பொ. அரசு ஆகியோருக்குப் பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டும், நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் கே. நடேசன் அவர்களின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர்கள் ஜி சின்னத்தம்பி, சத்தியநாதன் ஆகிய இருவரையும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சின்னாளப்பட்டியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

3—10—55 மாலை 6 மணிக்கு, சின்னாளப்பட்டி வள்ளுவர் திடலில், தோழர் கே. எஸ். எஸ். மணி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், திராவிடநாடு பிரிய வேண்டிய அவசியம் பற்றியும், தென்னாட்டிலுள்ள தொழில் வளம் பற்றியும், வடநாட்டிலுள்ள தொழில் வளம் பற்றியும், நெசவாளர் கிளர்ச்சியை ஒட்டி அமைதியான முறையில் ஊர்வலம் வந்தவர்களை போலீசார் தடியடி செய்ததைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

போடிநாயக்கனூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

5—10—55 இரவு 7 மணிக்கு, தோழர் அ. அ பரமசிவன் தலைமையில் தி மு கழக 7-வது ஆண்டு விழா—நாட்டுப் பிரிவினை விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மதிமன்னன், முத்துக்கிருட்டினன், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

8—10—55 இரவு 9 மணிக்கு, நகர் பெருமான் கோவில் முன்பாக, தோழர் எம். பெரியசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் கே. எஸ் சந்தானம் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

குள்ளக்காபாளையம் தி.மு. கழகம்

7—10—55ல், தோழர் கு. கிருஷ்ணசாமி தலைமையில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 30—9—55ல் நடைபெற்ற நாடக வரவு-செலவு கணக்குகளைத் தணிக்கை செய்து சரியென ஒப்புக் கொள்ளப்பட்டும், செயலாளர் தோழர் கே. பி. மல்லையசாமியின் விலகல் கடிதத்தைப் பரிசீலித்து ஏற்றுக்கொண்டும், புதிய செயலாளராகத் தோழர் தி. நடராசனை தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை 1-வது வட்ட தி. மு. கழகம்

9—10—55 மாலை 6-30 மணியளவில், கழகச் சார்பில், தி. மு கழக 7-வது ஆண்டு விழா—நாட்டுப் பிரிவினை வாரத்தை யொட்டி நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் இலா. கண்ணன் தலைமை தாங்கினர். தோழர் எஸ் எஸ். தென்னரசு, தி. மு. கழக துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் நடராசன், சேதுராசன் ஆகியோர் பேசினர். தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்களின் கோகலே மண்டபச் சொற்பொழிவு ஒலிபரப்பப்பட்டது. சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. நாட்டுப் பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெங்களூர்— இலக்குமணபுரி தி. மு. க.

9—10—55 காலை 11 மணியளவில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், 'மணி மகுடம்'—நாடகம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

நன்னிலம் வட்ட தி. மு. கழகம்

9—10—55ல் எனங்குடியில் வட்டச் செயலாளர் தோழர் அ. நடராசன் தலைமையில் நடைபெற்ற வட்டச் செயற்குழுக் கூட்டத்தில், பொதுச்செயலாளருக்கு நன்னிலம் தாலுகாவில் வரவேற்பு கொடுப்பது என்றும், நன்னிலம் வட்டத்தில் நிறைய கிளைக் கழகங்கள் ஏற்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—30/55

சித்தூர் மாவட்ட தி. மு. க. கிளைத் தேர்தல்

★

சித்தூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளைத் தேர்தல் **16—10—55** ஞாயிறன்று பிற்பகல் **2** மணிக்குச் சித்தூர் மாதா கோவில் தெரு. தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்திவைப்பார்.

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகளின் மாவட்டப் பிரதிநிதிகள், தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப் பெறும் உரிமைச் சீட்டுடன் தேர்தலில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்',
சென்னை-13
4—10—55

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

****

செய்திச் சுருள்

★

வடசென்னை குறள் நெறிக் கழகம்

11-10-55ல் நடைபெற்ற மேற்படி கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் செயலாளர் தோழர் தி. கா. மதிவாணனின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், தோழர்கள் தி. போ. வீரன், பா. கோ. வீரராகவன் ஆகியோரை செயலாளராகவும், பொருளாளராகவும் தேர்ந்தெடுத்து முடிவு செய்யப்பட்டது.

கடம்பத்தூர் தமிழ் நூல் நிலையத் திறப்பு விழா

2—10—55 காலை 8 மணிக்கு, தோழர் வி. சு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கடம்பத்தூர் வட்டத்தில் தமிழ் நூல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டதுடன், தோழர் வி. சு மாணிக்கம், க நடராசன், ச. இராமச்சந்திரன் ஆகியோரை முறையே தலைவராகவும், பொதுச்செயலாளராகவும், செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

புதுக்கோட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

அரசினரால் அண்மையில் புதுக்கோட்டையில் திறக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், 8—10—55ல் நடைபெற்ற கூட்டமொன்றில், செயலாளராகத் திரு. மா. இரத்தினவேலும், பொருளாளராகத் திரு. சிவசுப்பிரமணியனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருக்குறள் வகுப்பு

8—10—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை, எண். 15 முத்து கிருஷ்ணன் தெரு இல்லத்தில் "திருக்குறள் வகுப்பு" நடைபெற்றது. திரு. மயிலை-சிவமுத்து அவர்கள் 'வலியறிதல்' என்ற அதிகாரத்தினை நடத்தினர். தொடர்ந்து திரு வல்லபாலசுப்பிரமணியம், அழகுவேலன், திருமதி சுந்தராம்பாள் ஆகியவர்கள் பேசினர்.

பின்னர், 25—10—55ல், டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.

பெயர் சூட்டல்

11-9-55 பவானி சாகர், தொட்டம்பட்டி தி. மு. கழகச் செயலாளர் தோழர் சுந்திரம்—விசாலாட்சிக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு தோழர் சி பி. சிற்றரசு அவர்களால் 'சேரலாதன்' என்று பெயரிடப்பட்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

சென்னை 13-வது வட்ட தி. மு. கழகத் தோழர் வி. பொன்னுசாமி அவர்களது துணைவியார் பழனி அவர்கள், 7-9-55ல் பெண் மகவொன்றுக்குத் தாயானர். மகவுக்கு 10-10-55ல், 'தென்னரசி' எனப் பெயர் சூட்டப்பட்டது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

தாரை வட்ட தி. மு. க. பொருளாளர் திரு. கே. எஸ். எஸ் பெரியார் அவர்களின் புதல்வன் கே. எஸ். பெரியசாமி அவர்களின் குழவிக்கு 'இளங்கோ' என பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சி கருதி ரூ 1 அன்பளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

நெடுஞ்செழியன் அறிவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைக் கொண்ட சமுதாயத் தவராக இருக்கிறோம்;

"பிற நாடுகளின் வளர்ச்சிக் கேற்ப—சிறப்பிற்கேற்ப, நமது நாடும் தலைதூக்க வேண்டுமானால், 'இளமை உள்ளம்' காப்பாற்றப்பட வேண்டும்; அப்படிப்பட்ட இளமை உள்ளங்கள் காப்பாற்றப்படுவதாக — வளர்க்கப்படுவதாக இருந்தால்தான், இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளிலாவது, நமது நாடும் அத்தகைய ஒரு சீர்பெற முடியும்."

'இளமை உள்ளத்'தைக் காணுவதெங்கே?

"நமது நாட்டிலுள்ள குழந்தைகளை எடுத்துக்கொள்வோம்; நமது குழந்தைகள் வரவர எவ்வளவு தூரம் கெட்டுவிடுகின்றனர் — அவர்களது 'இளமை உள்ளத்'தை இழக்கின்றனர் என்று கவனித்தால், அவர்கள், தமது 5 அல்லது 6-வது வயதிலேயே கெட்டுவிடுகின்ற நிலைமையை நாம் காணலாம்;

"சாதாரணமாக ஒரு வீட்டிலுள்ள 3, 4 வயதுக் குழந்தை ஒன்றிடம் மிட்டாயைக் கொடுத்தால், அது உடனே, அம்மிட்டாயை எடுத்துக் கொண்டு வெளியே சென்று, அடுத்த வீட்டுக் குழந்தையுடன் கூடிக்குலவி, அதற்கும் பங்கிட்டுக் கொடுத்து, தானும் தின்று மகிழும் காட்சியைக் காணலாம்; அங்கேதான் நாம், 'இளமை உள்ளத்'தைக் காண்கிறோம். 'நாம் உண்பது மட்டுமல்ல—பிறருக்கும் கொடுத்துண்போம்' என்ற நற்பண்பு அக்குழந்தையிடம்—'இளமை உள்ளம்' கொண்ட குழவியிடம் காண்கிறோம்; 'இந்த மிட்டாய் என்னுடையது; இது எனக்கே சொந்தமானது; எனவே, இதை நானே சாப்பிடவேண்டும் —மற்றவருக்குக் கொடுக்கக்கூடாது,'—என்ற எண்ணம் அந்தக் குழந்தைக்கு உருவாவதில்லை;

'குறுகிய உள்ளம்' உருவாகும் நேரம்!

"ஆனால், 'முதுமை உள்ளம்' படைத்தோரோ, பண்டத்தை எடுத்துக்கொண்டு வெளியே ஓடிச் சென்ற தமது குழந்தை, பிற குழந்தைக்குக் கொடுத்துண்பதைக் கண்டு, பிறிதொரு சமயம் அதனை அதட்டி, வீட்டினை அடைத்துப் போட்டுவிட்டு, 'அதனைத் தின்று விட்டுத்தான் வெளியே செல்ல வேண்டும்' என்று அக்குழந்தையை வற்புறுத்தும்போதுதான் அக்குழந்தை, 'முதுமை உள்ளம்' கொண்டவர்களுக்குப் பயந்துவிடுவதுடன், தன்னுடைய நண்பனுக்கும் கொடுக்கவேண்டுமே என்ற எண்ணத்துடன், 'முதுமை உள்ளங்' கொண்டோருக்குத் தெரியாமல், பாதிப் பண்டத்தை மறைத்து வைத்துக்கொண்டு வெளியே சென்றதும் கொடுக்கிறது; அப்போதுதான், அந்தக் குழந்தைக்கு —'பண்டத்தை மறைத்துவைக்க வேண்டும்' என்ற எண்ணம்— 'திருட்டு' மனப்பான்மை உருவாகிறது; பரந்த பண்பு குறைகிறது; ஆக, ஒரு குழந்தை தனது 4-5-வது வயதுப் பருவத்திலேயே 'இளமை உள்ளம்' அற்றதாக்கப்பட்டுவிடுகிறது. 'இளமை உள்ள'த்திற்குத் தேவையான உயர்பண்பு—நற்பண்பு கெடுக்கப்பட்டுவிடுகிறது; இந்தப் பண்பு, அக்குழந்தை வளர வளர, குழவிப் பருவத்தைக் கடந்து, பள்ளிப் பருவம், வாலிபப் பருவம் போன்ற பற்பல பருவ காலத்தில் குறைந்து, 'முதுமை உள்ள'த்தைப் பெற்றுவிடுகிறது; அந்த 'முதுமை உள்ள'த்தைப் பெற்றுவிடுகிறபோதுதான், பிறருக்கும்—'இளமை உள்ள'த்தினருக்கும்—அந்த 'முதுமை உள்ள'த்தை உருவாக்கும் குணமும் வளருகிறது; இவ்வாறு, நல்ல உள்ளங்கள்—'இளமை உள்ள'ங்கள் பிஞ்சிலேயே கருகிவிடுவதால்தான், எதிர்காலத்தில் இருக்கவேண்டிய நற்பண்பும், குணமும், ஆற்றலும், அஞ்சாமையும் குறைந்துவிடுகின்றன;

"'இளமை'க்கும் 'முதுமை'க்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன; 'இளமை', அது நிலைபெற்றிருக்க வேண்டிய காலம்—பருவம் கடந்துவிட்டால் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகி விடுகிறது. அதனைத்தான் பெரும்புலவர்— முதுகிழவர்—மிக அழகான முறையிலே, புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் விளக்கியிருக்கிறார்:—

"அப்புலவர் ஒரு குட்டையினருகே சென்றார்; அக்குட்டைக் கருகில் ஒரு மருத மரம் நிற்கவும், அம்மரத்தின் ஒரு கிளை தாழ்ந்து, குட்டையிலுள்ள தண்ணீரைத் தொடும் அளவிற்கு வளைந்து கிடப்பதையும் கண்டார்; உடனே தமது இளமைப் பருவ நிகழ்ச்சிகளை மனதிற்குக் கொண்டு வருகிறார்; அதாவது —'நான் சின்னஞ் சிறு பருவத்தினனாக—துட்டனாய்த் திரிந்த காலத்தில், இக்குட்டைக்கு அருகில் உள்ள மருத மரத்தில் ஏறி, தாழ்ந்த அந்தக் கிளை வழியே சென்று, அக்குட்டையினுள் குதித்தேனே—பக்கத்திலிருந்து பார்த்தோரெல்லாம் என் செய்கையைக் கண்டு அச்சமுற்றனரே; குட்டையில் குதித்த நான், குட்டையின் அடிப்பரப்பு வரையிலும் சென்றேன்—'குட்டையின் அடிப்பரப்பு வரையிலும் சென்றேன்' என்று நான் கூறும்போது, என்னைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அதனை நம்பாவிட்டால் என் செய்வதென்று கருதி, என்னுடைய செயலை மெய்ப்பிக்க, கைப்பிடி மண்ணும் கொண்டுவந்தேனே—இப்போது என்னுடைய நிலை என்ன? கையில் ஊன்றித் திரிய தடி வைத்துக் கொண்டல்லவா தள்ளாடுகிறேன்? என்னுடைய இளமை முறுக்கினை இழந்தேனே; இனிமேல் அந்த இளமைத்தன்மையை அடைவேனா?' என்று, எக்கும் முறையில் கூறியிருக்கிறார்;

"'நான் இக்குட்டையில் குதிக்கும்போது எதையும்எண்ணவில்லையே—கல்லாதவனாய் இருந்த போதிலும் அப்போது நான் பெற்றிருந்த இளமையை நான் இப்போது இங்கே அடைவேனா? —அது எளிதானதா—எனது இளம் பருவத்தை, கல்வி கற்காமல் வீணாக்கி விட்டோமே' என்று கசிந்துருகுகிறார்."

அச்சத்தைத் தவிர்க்க ஆவன செய்வீர்!

இவ்வாறு குறிப்பிட்ட பொதுச் செயலாளர் அவர்கள் மேலும் பேசியதாவது:—

"நமது நாட்டின் எதிர்காலம், ஒரு நல்ல நிலையை எய்தவேண்டும்; அத்தகைய ஒரு நல்ல நிலைமையை நாம் உருவாக்குவதற்கு நம்மிடையே — இளைஞர்களிடையே—இளம் உள்ளத்தவரிடையே 'அச்சம் தவிர்த்தல்' என்ற நிலை பிறக்கவேண்டும்; நம்முடைய மனதிலே குடிபுகுந்திருக்கின்ற அச்சத்தை நாம் தவிர்ப்போமேயானால், நிச்சயமாக நாம், நம்மை—எதிர்நோக்கியிருக்கும் எதனையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்றவர்களாகிறோம்;

"அச்சம் தவிர்த்தல் — என்று கூறும்போது, எதற்கும் அஞ்சக் கூடாது என்பதும் பொருளாகிவிடாது; எனவேதான் வள்ளுவரும், 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்; எதைக் கண்டு நாம் அஞ்சவேண்டுமோ—யாரைக்கண்டு நாம் அஞ்சவேண்டுமோ, அதைக்கண்டு, அவரைக் கண்டு அஞ்சவேண்டும்; 'அச்சம் தவிர்த்தல்' என்பதால் அதனை குறித்து அச்சப்படாதிருத்தல் பேதமையாகும் என்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்;

"ஆனால் நம்முடைய நாட்டவரோ, தாங்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை—வாழ்நாள்முழுவதுமே அஞ்சிஅஞ்சிச் சாகின்றனர்; இதற்குக் காரணம் அவர்களது 'இளம் உள்ளம்' பாழ்படுத்தப்பட்டு, முதுமை உள்ளம் வேரூன்றுகின்ற காரணம்தான்; எனவேதான்—அத்தகைய உள்ளத்தைத் தவிர்ப்பதற்காகவேதான் 'அச்சம் தவிர்' என்று கூறவேண்டியதாயிற்று.

"பாரதியார் கூட, 'அஞ்சி அஞ்சிச் சாவார்; இவர் அஞ்சாத பொருளில்லை அவனியில்' என்று கூறியிருக்கிறார். அதற்கொப்பத்தான் நம்முடைய நாட்டவரும் எதற்கெடுத்தாலும் அச்சமுறுகின்றனர்;

"நம்முடைய இளமை உள்ளங்களிலே அச்சம் எனும் நுண் கிருமிகள் நுழையவே கூடாது; க்ஷயநோய் பிடிக்கப்பட்ட ஒருவன், அந்நோய்க் கிருமிகளால் எப்படி அணு அணுவாக உருக்கப்பட்டு, சிதைக்கப்படுகிறானோ, அதுபோலத்தான் இளம் உள்ளங்களிலும், அச்சம் என்னும் நோயின் நுண் கிருமிகள் நுழைந்தால், அந்த இளம் உள்ளங்களை அந்த நோய் அரித்து அரித்து சல்லடைக் கண்களாகத் துளைத்து விடுகின்றன.

"இன்றைய நாட்களிலே நாம் கூடத்தான் பார்க்கிறோம்—பள்ளி மாணவர்கள் இரவில் தனித்து, தாங்களே துணிந்து தெருக்களில் வரமாட்டார்கள்; காரணம், எதையும் தாங்களே துணிந்து செயலாற்றும் திறன் அவர்களிடம் குன்றி, அந்த அளவிற்கு அவர்களிடையே அச்சம் குடிகொண்டிருப்பதுதான்—தங்கள் உள்ள உறுதியை இழந்திருப்பதுதான்;

"கேவலம் பல்லி சத்தமிடுகிறதென்றால் அதற்குக்கூட நமது நாட்டவர் அச்சப்படுகின்றனர்; அது அவசியமில்லாத அச்சம்; பல்லி சத்தமிடுவதைக் கேட்டு, நம்மைப்போன்ற பிற நாட்டவர் யாராவது அச்சப்படுகிறார்களா? இல்லை; ஏனெனில் அவர்களிடையே 'அச்சம்' என்ற நிலை இல்லை; எனவேதான் அவர்களது நாடும் நன்னிலை பெற்றிருக்கிறது."

நாட்டிற்கு நலனுற்ற உள்ள உரம் பெறுவீர்!

"நாம் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறோமோ அதுதான் நாட்டின் நிலையும்; நம்முடைய பண்பு எதுவோ அதுதான் நமது நாட்டின் பண்புமாகும்; இதனை மாணவர்கள் — இளைஞர்கள் நன்கு உணர்ந்து நாட்டின் குறைபாடுகளை நீக்க முன்வர வேண்டும்— இளமை உள்ளத்துடன்! நாட்டின் நலனை மேம்படுத்துவதில் ஆற்றும் பணியில் அவர்கள் எதற்கும் அஞ்சாத உள்ள உரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்;

"நாட்டின் நலனில் மட்டுமல்ல —பல துறைகளிலேயும் மாணவர்கள் ஈடுபட வேண்டியவர்கள்; அப்படி, பல துறைகளிலும் ஈடுபட இருக்கின்ற மாணவர்களிடத்து அச்சம் குடிபுகுந்திருக்குமானால், அவர்களிடத்தில் எங்கே மகிழ்ச்சி தோன்றக்கூடும்?—நாட்டில் மகிழ்ச்சி எப்போது நிலவும்?"

சந்தேகிக்கும் அவல நிலையை மாற்றுவீர்!

"பெரும்பாலும் நாம், நமது நேரத்தின் பெரும்பகுதியையும் அச்சத்திற்கே செலவிடுகிறோம்; மற்ற நாடுகளில் செய்யப்பட்ட பொருட்களை நாம் வாங்கும்போது இருக்கிற நம்பிக்கை—மன தைரியம், நமது நாட்டில்— இந்தியாவில்—செய்யப்பட்ட பொருட்களை வாங்கும்போது இருப்பதில்லை. ஏன்? சந்தேகப்படுகிறோம்; 'நாம் வாங்குகின்ற பொருள் உண்மையானதுதானா —உறுதியானதுதானா — என்ற அச்சம் நமக்கு ஏற்படுகிறது; அதன் காரணமாக அவநம்பிக்கை ஏற்படுகிறது; இந்த அவல நிலையை மாற்றும் பெரும் பொறுப்பு மாணவர்களையே சார்ந்ததாகும்; நாட்டின் நாணயத்தையும், நேர்மையையும் காப்பாற்றி நிலைநாட்டுவதில் மாணவர்கள் தங்கள் பங்கையும், பொறுப்பையும் தெரிந்து கொள்ள வேண்டும்; எல்லா துறைகளிலுமே நாட்டின் நேர்மையையும், நாணயத்தையும் துணிந்து காப்பாற்றினால்தான் எதிர்காலம் சீருறும்—தங்கள் அறிவும் பெருகும் என்ற உண்மையை மாணவர்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்."

உள்ளதைச் சொல்லும் பண்பை உருவாக்குக!

"நமது நாட்டவரிடையே உள்ளதைச் சொல்லும் பண்பு இல்லை; ஆனால், இந்த நற்பண்பு மற்ற நாடுகளிலே வளர்க்கப்படுகிறது; எனவே தான் அந்நாடுகளெல்லாம் வாழ்கின்றன—நாம் வாழ்க்கையின் கடைநிலையில் இருக்கிறோம்; உள்ளதைச் சொல்லும் அந்த நற்பண்பை மாணவர் தமது இளம் வயதிலேயே இழந்து விட்டால், மீண்டும் அந்தப் பண்பு வராது—அது கிடைத்தற்கரிய ஒன்றாகிவிடும்; இன்றைய நாட்களில் அந்தப் பண்பை இழந்து, அதனால் இழிநிலை பெற்றுவரும் இந்நாடு, தனது வருங்காலத்திலாயினும் நல்ல ஒரு நிலையை அடைய வேண்டுமானால், இத்தகைய பண்புகளைக் கொண்ட இளமை உள்ளங்கள் வளர்க்கப்படவேண்டும்; இழிநிலை போக்க இளம் உள்ளங்கள் துணிந்து முன்வர வேண்டும்;

சோம்பல்—முதுமை உள்ளத்தின் பண்பு!

'எதையும் கண்டு அஞ்சாமை என்ற தன்மையுடன், எதையும் சிந்தித்துச் செயலாற்றும் ஆற்றலும்—பண்பும் கொண்ட இளமை உள்ளங்கள்தான் மிக மிகத் தேவை; அவர்கள், எண்ணுவது, சிந்திப்பது, செய்வது ஆகியவற்றில் சோம்பல் கொள்ளக்கூடாது; அந்தச் சோம்பல், முதுமை உள்ளத்தின் பண்பு அத்தகைய 'முதுமை உள்ளங்களுக்கு இளைஞர்கள் இடங் கொடுத்துவிடக்கூடாது;

படித்தும் பயனற்ற நிலைக்கு உள்ளாகாதீர்!

"படித்தும், அதனால் தான் பெற்ற நல்ல கருத்தினைப் பிறருக்கு எடுத்துச் சொல்லத் தெரியாதவனால் நாட்டிற்குப் பயனில்லை; அந்த நிலைக்கும் மாணவர்கள் தங்களை உள்ளாக்கிவிடக் கூடாது; எனவே, அத்தகைய நிலையினைத் தாங்கள் பெற, இத்தகைய மன்றங்களை வெகுவாகப் பயன்படுத்திக்கொள்ளத் துணிவுடன் முன்வர வேண்டும்; அப்படி அவர்கள் பயன்படுத்தத் தவறினால் பின்காலத்தில் அவர்கள் நிச்சயம் நல்ல நிலையினை எய்த முடியாது;

இறக்கும்போதும் சிரிப்போம்!

"எனவே, அத்தகைய நோக்கம் கொண்ட தமிழ் மன்றங்களின் மூலம் நாட்டுக்கு அரும் பணி ஆற்றும் நல்ல பண்பை மாணவர்கள் பெற்றுத் திகழ வேண்டும்; அப்படிப்பட்ட நற்பண்பைப் பெற்று, நாட்டுக்கு நல்லன பயத்தோர், தாம் சாகுந் தருவாயிலுங்கூட சிரித்துக் கொண்டே — 'நாட்டுக்குச் செய்யவேண்டிய எனது கடமையைச் செய்தேன்— எத்தனையோ இடுக்கண்கள் எனக்கு வந்துற்றன—எனினும், எனது இளமை உள்ளத்தால் அவற்றை எதிர்த்துச் சமாளித்தேன்—நான், ஒரு கோழையைப்போல் அஞ்சி அஞ்சிச் சாகவில்லை; பலமுறை சாகவில்லை; வீரனாக வாழ்ந்தேன், வீரனாகச் சாகிறேன்' என்று கூறிக் கொண்டே இறக்கலாம்; தங்கள் சாவு பற்றி அவர்கள் துளியும் கவலைப்படத் தேவையில்லாதவர்களாக இருக்க முடியும்."

★

கம்பளிப் பூச்சிகள் படையெடுப்பு!

மதுரை,—

உசிலம் பிர்க்காவில், 8 கிராமங்கள் மீது, கம்பளிப் பூச்சிகள் படையெடுத்துள்ளதால், 500 ஏக்கர் மணிலாப் பயிர்கள், பூச்சிகளால் நாசமாக்கப்பட்டுள்ளதாம்.

சொற் பயிற்சிக் கூட்டம்

14—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை - முத்தியாலுப்பேட்டை எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் தோழர் ம. லெ. இளவழகன் தலைமையில் நடைபெறும். 'பொருள்' எனுந் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

அக் 15 சென்னை-திரு வி. க. மன்றம்

16 காலை 9 மணிக்கு வேலூர் இளங்கோ படிப்பகத் திறப்பு விழா; பிற்பகல் 2 மணிக்கு சித்தூரில், சித்தூர் மாவட்டத் தேர்தல்; மாலை பொதுக் கூட்டம்

21 சென்னை-சிந்தாதிரிப் பேட்டை

23 உதகமண்டலம்

24, 25, 26 மதுரைப் பகுதிகள்

27 ஆலடிப்பட்டி (தென்காசி)

30 மேலப்புதூர்-திருச்சி

நிகழ்ச்சிகள்

12—10—55 மாலை $3\frac{1}{2}$ மணியளவில், சென்னை புரசைவாக்கம் எம். சி. டி. எம். உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில், அப்பள்ளியின் மாணவர் தமிழ்க் கலை மன்றச் சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. வி.எஸ் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'இளமை உள்ளம்' எனுந் தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார். ஏராளமான மாணவர்களும், ஆசிரியர் குழாத்தினரும் கலந்து கொண்டனர்.

கூட்ட இறுதியில், தங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி வருகை தந்து, சொற்பொழிவாற்றி, கூட்டத்தைச் சிறப்பித்துக்கொடுத்த பொதுச் செயலாளர் அவர்கட்கு, மன்றச் செயலாளர் மாணவத் தோழர் திருநாவுக்கரசு நன்றி கூறிக்கொண்டார். (ந-கி.)

ஏன் இந்த நிலைமை?

"நாட்டில் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையை போக்குவதற்கு, இந்திய சர்க்கார், வெகு விரைவிலேயே 10-இலட்சம் டன் உருக்கு இரும்பை இறக்குமதி செய்யும்," என்று, மத்திய சர்க்கார் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.